**ஜனவரி – 03**

# TNPSC துளிகள்

- ❖ மத்தியப் பாதுகாப்பு அமைச்சகம் ஆனது, 2025 ஆம் ஆண்டினை 'சீர்திருத்த ஆண்டாக' அறிவித்துள்ளது.
- ❖ மத்திய அமைச்சரவையானது, ஒரு மெட்ரிக் டன்னுக்கு 3,500 ரூபாய் என்ற விகிதத்தில் டைஅமோனியம் பாஸ்பேட் (DAP) உரத்திற்கு வழங்கப்படும் ஒற்றை முறைச் சிறப்பு மானியத்தினை 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் மறு உத்தரவு வரும் வரை நீட்டித்துள்ளது.
- ❖ இந்திய எஃகு ஆணையம் நிறுவனம் (SAIL)ஆனது, இந்தியாவின் கிரேட் பிளேஸ் டு வொர்க் இன்ஸ்டிடியூட் என்ற நிறுவனத்தினால், தொடர்ந்து இரண்டாவது முறையாக 'வேலை செய்வதற்கான சிறந்த இடமாக' அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- ❖ ஜவுளித் துறை அமைச்சகம் ஆனது, இந்தியாவின் பல்வேறு பகுதிகளின் கைத்தறிப் புடவைகளைக் கொண்டாடும் வகையில் 3வது "விராசத் புடவை திருவிழா 2024" என்ற மாபெரும் நிகழ்வினை புது டெல்லியில் ஏற்பாடு செய்தது.

# தமிழ்நாடு செய்திகள்

## 13 நகராட்சிகள் உருவாக்கம்




- ❖ தமிழக அரசானது, எண்ணற்ற உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பதற்காக என முன்மொழியப்பட்டுள்ள வரையறைகளை அறிவித்துள்ளது.
- ❖ இதில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் அதிக எண்ணிக்கையிலான கிராமப் பஞ்சாயத்துகளை இணைப்பது உள்ளிட்டவை அடங்கும்.
- ❖ 13 நகராட்சிகள் மற்றும் 25 நகரப் பஞ்சாயத்துகளை உருவாக்குவது குறித்தும் இந்த முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ முன்மொழியப்பட்டுள்ள இந்தப் புதிய நகராட்சிகளில் கன்னியாகுமரி, அரூர் மற்றும் பெருந்துறை ஆகியவை அடங்கும்.
- ❖ ஏற்காடு, காளையார்கோயில், திருமயம் உள்ளிட்ட 25 பேரூராட்சிகளை உருவாக்க

அரசு முன்மொழிந்துள்ளது.

- இது தவிர, 29 கிராமப் பஞ்சாயத்துகள், 25 பேரூராட்சிகளுடன் இணைக்கப்பட உள்ளன.

## 2024-25 ஆம் நிதியாண்டின் நான்காம் காலாண்டில் தமிழ்நாடு அரசின் கடன்கள்


| Month | Proposed Date | Expected quantum of borrowing (in ₹ Cr) | States/UTs who have confirmed participation and the tentative amount of borrowing (in ₹ Cr) | |
|---|---|---|---|---|
| January, 2025 | January 07, 2025 | 37000 | Andhra Pradesh | 3000 |
| | | | Karnataka | 4000 |
| | | | Kerala | 2000 |
| | | | Maharashtra | 4000 |
| | | | Punjab | 2000 |
| | | | Rajasthan | 1000 |
| | | | Tamil Nadu | 2000 |
| | | | Telangana | 3000 |
| | | | Uttar Pradesh | 3000 |
| | | | West Bengal | 4500 |
| | January 14, 2025 | 24719 | Jharkhand | 1000 |
| | | | Karnataka | 4000 |
| | | | Maharashtra | 5000 |
| | | | Mizoram | 119 |
| | | | Punjab | 500 |
| | | | Tamil Nadu | 1000 |

- 2024-2025 ஆம் நிதியாண்டின் நான்காவது காலாண்டில் 45,000 கோடி ரூபாய் கடன் வாங்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.
- 2024-2025 ஆம் நிதியாண்டின் முதல் அரையாண்டு வரை, மாநில மேம்பாட்டுக் கடன் பத்திர வெளியீடு (SDL) மூலம் தமிழ்நாடு அரசு 50,000 கோடி ரூபாய் திரட்டியுள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டிலிருந்து பெறுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) கடன் பெறுவதற்கான உச் சவரம்பு 3% ஆகும்.
- 2021-22 முதல் 2024-25 ஆம் ஆண்டு வரையிலான நான்கு ஆண்டுகளுக்கு மின்துறைச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதன் மூலம் GSDPயில் 0.5 சதவீதம் கூடுதல் கடன் வாங்கப் பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியின் இறுதியில் SDL வெளியீடு மூலம் பெறப்பட்ட கடனில் 5,96,619.2 கோடி ரூபாய் நிலுவையில் இருந்தது.
- இது 2025 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியின் இறுதியில் 6,87,034.3 கோடி ரூபாயாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியின் இறுதியில் தமிழகத்தின் மொத்த நிலுவைத் தொகை 8,47,022.7 கோடி ரூபாயாக இருந்தது.
- இது 2025 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியின் இறுதியில் 9,55,690.5 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## ஸ்க்ரப் டைபஸ் காய்ச்சலைத் தடுப்பதற்கான வழிகாட்டுதல்கள்


- தமிழ்நாடு மாநிலப் பொது சுகாதார இயக்குநரமானது இந்த நோயைக் மிக நன்கு கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்குமான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- மனிதர்கள் எதிர்பாராத விதமாக ஓம்புயிரியாக மாறுகின்ற, பூச்சிகளால் பரவும் இந்த விலங்குவழித் தொற்று நோய் ஆனது பல்வேறு இடங்களில் பதிவாகியுள்ளது.
- இந்த நோயின் அறிகுறிகள் வெளிப்படத் தெரிவதற்கான காலம் ஒன்று முதல் இரண்டு வாரங்கள் ஆகும்.

- வேளாண் தொழிலாளர்கள், வெளிப்புறச் செயல்பாடுகள் சார்ந்த ஆர்வலர்கள் மற்றும் புதர்கள் நிறைந்தப் பகுதிகளுக்கு அருகில் வசிப்பவர்கள், எலிகள் மற்றும் பூச்சிகளால் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்கள் ஆகியோர் இதனால் பாதிக்கப்படக் கூடிய பெரும் ஆபத்தில் உள்ளனர்.
- பூச்சிக்கொல்லித் திரள் உருவாக்கம், கிராமங்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பெரும் புதர்களைச் சுத்தம் செய்தல், கொறித்துண்ணிகளின் (எலிகள்) எண்ணிக்கையைக் குறைத்தல் ஆகியவை இந்த நோயைத் தடுப்பதற்கான கட்டுப்பாடு மற்றும் தடுப்பு முறைகள் ஆகும்.




## தேசியச் செய்திகள்

### 2025 ஆம் ஆண்டு சிறை கையேடு விதிகளில் திருத்தங்கள்




- சிறைகளில் உள்ள கைதிகள் மத்தியில், அவர்களின் சாதியின் மீதான அடிப்படையில்

பாகுபடுத்தி, வகைப்படுத்துவது குறித்து கண்காணிப்பதனை இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ சிறைக் கைதிகளின் சாதி அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு தீர்வு காண்பதற்காக, 'மாதிரி சிறைக் கையேடு, 2016' மற்றும் 'மாதிரி சிறைச்சாலைகள் மற்றும் சீர்திருத்தச் சேவைகள் சட்டம், 2023' ஆகியவை திருத்தப்பட்டுள்ளன.


❖ அந்தக் கையேட்டில் கொண்டு வரப்பட்டுள்ள புதியச் சேர்க்கையின்படி, சிறைச்சாலை அதிகாரிகள் கைதிகளை சாதியின் அடிப்படையில் பாகுபடுத்துவதில்லை, வகைப் படுத்துவதில்லை, பிரிப்பதில்லை என்பதைக் கண்டிப்பாக உறுதி செய்ய வேண்டும்.

❖ 2023 ஆம் ஆண்டு மாதிரி சிறைச்சாலைகள் மற்றும் சீர்திருத்தச் சேவைகள் சட்டத்தின் 'இதர விதிகளில்' மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

❖ 'சிறைகள் மற்றும் சீர்திருத்த மையங்களின் சாதி அடிப்படையிலான பாகுபாட்டிற்குத் தடை' என்ற புதிய தலைப்பு ஆனது 55(A) பிரிவாக சேர்க்கப் பட்டுள்ளது.

❖ சிறைக்குள் உள்ள சாக்கடை அல்லது கழிவுநீர்த் தொட்டியை மனிதர்களே துப்புரவு செய்வது அல்லது அபாயகரமான முறையில் சுத்தம் செய்வது அனுமதிக்கப்படக் கூடாது.

## வேளாண் திட்டங்களின் விரிவாக்கம்




❖ மத்திய அரசானது, 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று இரண்டு பயிர்க் காப்பீட்டுத் திட்டங்களை 2025-26 ஆம் ஆண்டு வரை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து உள்ளது.

❖ அவை பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா (PMFBY) மற்றும் மறுசீரமைக்கப்பட்ட வானிலை அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (RWBCIS) ஆகியனவாகும்.

❖ இது முதன்மையான திட்டங்களை செயல்படுத்துவதில் தொழில்நுட்ப பயன்பாட்டு இணைப்பிற்காக தனியாக 824.77 கோடி ரூபாய் நிதியை உருவாக்கியுள்ளது.

❖ இந்த 824.77 கோடி ரூபாயில் புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தனி நிதியை

(FIAT) உருவாக்கவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- இந்த நிதியானது YES-TECH, WINDS என்ற திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப முயற்சிகளுக்கு நிதியளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும்.
- தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மகசூல் மதிப்பீட்டு அமைப்பு (YES-TECH) ஆனது, தொழில்நுட்பம் அடிப்படையிலான மகசூல் மதிப்பீடுகளுக்கு என குறைந்தபட்சம் 30% மதிப்புடன் மகசூல் மதிப்பீட்டிற்காக வேண்டி தொலைநிலை உணர்திறன் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.
- வானிலை தகவல் மற்றும் வலையமைப்புத் தரவு அமைப்புகள் (WINDS) ஆனது தொகுதி அளவில் தானியங்கி வானிலை நிலையங்கள் (AWS) மற்றும் பஞ்சாயத்து அளவில் தானியங்கி மழை அளவீட்டு அமைப்புகள் (ARGs) ஆகியவற்றினை அமைக்க திட்டம் இட்டுள்ளது.

## நல்லாட்சிக் குறியீடு 2023


| Other States – Group A | | Other States – Group B | |
|---|---|---|---|
| Rank | States | Rank | States |
| 1 | Gujarat | 1 | Madhya Pradesh |
| 2 | Maharashtra | 2 | Rajasthan |
| 3 | Goa | 3 | Chhattisgarh |
| 4 | Haryana | 4 | Jharkhand |
| 5 | Kerala | 5 | Uttar Pradesh |
| 6 | Karnataka | 6 | Bihar |
| 7 | Tamil Nadu | 7 | Odisha |
| 8 | Punjab | 8 | West Bengal |
| 9 | Telangana | | |
| 10 | Andhra Pradesh | | |

- 2023 ஆம் ஆண்டு நல்லாட்சிக் குறியீட்டினை வெளியிட வேண்டாம் என மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இது நல்லாட்சி வாரத்தில் (டிசம்பர் 19 முதல் டிசம்பர் 25 வரை) வெளியிவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் (UTs) மீது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் தரவரிசையாகும்.
- தற்போது அடுத்த பதிப்பினை (2025) வெளியிட அரசு திட்டமிட்டுள்ளது.
- வேளாண்மை, பொருளாதார நிர்வாகம், பொது சுகாதாரம் மற்றும் குடிமக்களை மையப் படுத்திய நிர்வாகம் உள்ளிட்ட துறைகளில் 50க்கும் மேற்பட்ட குறிகாட்டிகளை இந்தக் குறியீடு உள்ளடக்கியுள்ளது.
- 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான தரவரிசையில் முறையே தமிழ்நாடு மற்றும் குஜராத் ஆகியவை பெரிய மாநிலங்களில் முதலிடத்தைப் பெற்றுள்ளன.

## அணுசக்தி சார் நிறுவல்களின் பரிமாற்றப் பட்டியல் 2025

- முப்பது ஆண்டு கால நடைமுறையின் ஒரு தொடர்ச்சியாக, ஜனவரி 01 ஆம் தேதியன்று இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தங்களது அணுமின் நிலையங்களின் பட்டியலைப் பரிமாறிக் கொண்டுள்ளன.
- இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று தங்களது அணுமின் நிலையங்களைத் தாக்குவதைத் தடுக்கின்ற இருதரப்பு ஒப்பந்தத்தின் கீழ் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தம் ஆனது, 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியன்று கையெழுத்திடப் பட்டு, 1991 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது.

- ஒவ்வொரு நடப்பு ஆண்டிலும் ஜனவரி 01 ஆம் தேதியன்று இந்த ஒப்பந்தத்தின் கீழ் குறிப்பிடக் கூடிய அணுசக்தி நிறுவல்கள் மற்றும் மையங்கள் குறித்து இரு நாடுகளும் அதன் பரஸ்பர தகவல்களைத் தெரிவிக்க வேண்டும் என்று இந்த ஒப்பந்தம் என்பது வலியுறுத்துகிறது.
- இரு நாடுகளுக்கிடையிலான இத்தகையப் பட்டியல்களின் ஒரு தொடர்ச்சியான 34வது பரிமாற்றம் இதுவாகும்.




## நிலத்தடி நீர் மூலங்களின் மதிப்பீட்டு அறிக்கை 2024

**CATEGORIZATION OF ASSESSMENT UNITS**

(Blocks/ Mandals/ Taluks etc.)

| Sl.No | Category | Number of Assessment Units | | Recharge worthy Area | | Annual Extractable Ground Water Resource | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Number | % | in lakh sq. km | % | (in bcm) | % |
| 1 | Safe | 4951 | 73.39 | 16.51 | 66.57 | 301.17 | 74.14 |
| 2 | Semi Critical | 711 | 10.54 | 2.82 | 11.40 | 45.76 | 11.27 |
| 3 | Critical | 206 | 3.05 | 0.88 | 3.55 | 13.23 | 3.26 |
| 4 | Over-Exploited | 751 | 11.13 | 4.20 | 16.93 | 46.02 | 11.33 |
| 5 | Saline | 127 | 1.88 | 0.38 | 1.55 | NA | NA |
| | **TOTAL** | **6746** | | **24.80** | | **406.19** | |


- நாட்டின் மொத்த வருடாந்திர நிலத்தடி நீர் மீளேற்றமானது 446.90 பில்லியன் கன மீட்டர் (BCM) என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இயற்கையான நீர் வெளியேற்றத்திற்கான இந்த ஒதுக்கீட்டை வைத்து பூமியிலிருந்து எடுக்கக் கூடிய வருடாந்திர நிலத்தடி நீர் ஆதாரம் என்பது 406.19 BCM என மதிப்பிடப் பட்டுள்ளது.
- அனைத்து பயன்பாடுகளுக்குமான வருடாந்திர நிலத்தடி நீர் எடுப்பு 245.64 BCM ஆகும்.
- நாட்டின் நிலத்தடி நீர் எடுப்பின் சராசரி நிலை 60.47% ஆக உள்ளது.

- மொத்த வருடாந்திர நிலத்தடி நீர் மீளேற்றமானது கணிசமாக (15 BCM) அதிகரித்து உள்ளது மற்றும் நீர்ப் பிரித்தெடுப்பு ஆனது 2017 ஆம் ஆண்டு மதிப்பீட்டில் இருந்த அளவினை விட 2024 ஆம் ஆண்டில் (3 BCM) குறைந்துள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## ரஷ்யாவின் உக்ரைன் வழியான எரிவாயு பரிமாற்றம் நிறுத்தம்

- ஐந்தாண்டு ஒப்பந்தம் தற்போது முடிவடைந்ததை யடுத்து உக்ரைன் நாடு வழியாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு மேற்கொள்ளப்படும் ரஷ்ய எரிவாயுப் பரிமாற்றம் ஆனது நிறுத்தப்பட்டுள்ளது
- 2023 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தின் எரிவாயு இறக்குமதியில் ரஷ்ய எரிவாயு 10 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது, அதன் அளவு 2021 ஆம் ஆண்டில் 40% ஆக இருந்தது.
- ஆஸ்திரியா, ஸ்லோவாக்கியா மற்றும் மால்டோவா ஆகிய சில நாடுகள் மின்சார விநியோகத்திற்காக இந்தப் பரிமாற்று வழியையே சார்ந்திருந்தன.
- நார்வே நாட்டிலிருந்து குழாய் வழி எரிவாயு விநியோகத்துடன், ஐரோப்பிய நாடுகள் ஆனது, கத்தார் மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளிலிலிருந்து திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவினை (LNG) வாங்கியுள்ளன.




# மாநிலச் செய்திகள்

## போபால் விஷ வாயுக் கழிவுகளை அகற்றுதல்

- போபால் விஷவாயு துயரச் சம்பவம் நடைபெற்ற நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு, யூனியன் கார்பைடு தொழிற்சாலை தளத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த சுமார் 337 மெட்ரிக் டன் இரசாயனக் கழிவுகளை அகற்றும் பணி தொடங்கியது.
- மத்தியப் பிரதேசத்தின் பிதாம்பூரில் உள்ள ஒரு மையத்தில் இந்த அகற்றல் பணிகள் நடைபெறும்.

- இந்த நச்சுக் கழிவுகளில் சுமார் 162 மெட்ரிக் டன் மண், 92 மெட்ரிக் டன் செவின் மற்றும் நாப்தால் எச்சங்கள், சுமார் 54 மெட்ரிக் டன் பகுதியளவுப் பதப்படுத்தப்பட்ட பூச்சிக் கொல்லிகள் மற்றும் 29 மெட்ரிக் டன் கொதிகலன் உலைக் கழிவுகள் அடங்கும்.
- 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 02 ஆம் தேதியன்று இரவு யூனியன் கார்பைடு ஆலையில் இருந்து மெத்தில் ஐசோசையனேடு (MIC) வாயு பெருமளவில் வெளியானது.
- 2015 ஆம் ஆண்டில், 10 டன் இரசாயனக் கழிவுகளை எரித்துச் சாம்பலாக்கும் சோதனை நடத்தப்பட்டது.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## புத்தாண்டு விருதுகள் பட்டியல் 2025




- இங்கிலாந்து நாட்டின் கால்பந்து அணியின் முன்னாள் மேலாளர் கரேத் சௌத்கேட், இந்த ஆண்டுக்கான புத்தாண்டு விருதுகள் பட்டியலில் வீரப் பெருந்தகையாகப் (நைட்) தேர்ந்தெடுக்க ப்பட்டுள்ளார்.
- 800 மீட்டர் ஒலிம்பிக் ஜாம்பவான் ஆன கீலி ஹாட்ஜ்கின்சன் மற்றும் பாரீஸ் நகரில் வெள்ளி வென்ற ஹெப்டத்லெட் கத்தரினா ஜான்சன்-தாம்சன் ஆகிய இருவரும் MBE விருதினைப் பெறுகிறார்கள்.
- சைக்கிள் ஓட்டும் வீரர் டாம் பிட்காக், நீச்சல் வீரர் டங்கன் ஸ்காட் மற்றும் துடுப்புப் படகோட்ட வீரர் ஹெலன் குளோவர் ஆகியோர் தங்கள் பங்களிப்புகளுக்காக என OBE விருதுகளைப் பெற்றனர்.

- குழந்தைகளுக்கானப் புத்தக எழுத்தாளர் ஜாக்குலின் வில்சன் டேம் கிராண்ட் கிராஸ் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் தி பிரிட்டிஷ் எம்பையர் விருதினைப் பெற்றார்.

# இதரச் செய்திகள்

## 10 ஆம் நூற்றாண்டு சோழர் கால வணிகர் சங்கக் கல்வெட்டு

- இந்தியத் தொல்லியல் துறையானது, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள இலுப்பூர் தாலுக்காவில் உள்ள பிலிப்பட்டி என்ற கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட சோழர் கால வணிகர் சங்கக் கல்வெட்டினைப் பொருள் கண்டுணர்ந்துள்ளது.
- மங்கல நாடு, புறமலை நாடு, பூங்குன்றம் நாடு, மணலூர் நாடு மற்றும் கொடும்பாளூர் வீரப்பட்டினம் ஆகியவற்றின் ஐநூற்றுவர்கள் உட்பட பல்வேறு பிராந்திய பிரிவுகளின் வணிகக் குழுக்களை இது குறிப்பிடுகிறது.
- 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தக் கல்வெட்டு ஆனது பராந்தக சோழன் அல்லது உத்தம சோழன் ஆட்சியின் போது நிறுவப்பட்டிருக்கலாம்.
- இந்தக் கல்வெட்டில் அங்குசம் (அக்காலங்களில் யானைகளை கட்டுப்படுத்த வேண்டி பயன்படுத்தப் பட்ட கூர்மையான ஒரு கூரான கொக்கி), திரிசூலம் மற்றும் விளக்குகள் உள்ளிட்ட பல்வேறு குறியீடுகள் உள்ளன.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★